[கலைஞர் மு. கருணாநிதி] [1996 ஜூலை 17

பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதேபோல் நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் 12-வது வகுப்பு (+2) தேர்வு பெற்ற 10,000 பேர் மக்கள் நலப் பணியாளர்களாக நியமிக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலை வாய்ப்பும் மகளிர் மேம்பாடும்

107. குடிப் பழக்கத்தால் ஏற்படும் தீமைகளை மக்களுக்கு எடுத்துரைக்க மகளிர் குழுக்கள் மூலம் விளம்பரங்கள் செய்யும் பணி, ஏற்கெனவே தமிழ்நாட்டில் சில தனியார் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது போல் அரசால் மேற்கொள்ளப்படும். 25,000 மகளிருக்கு வேலை வாய்ப்பு அளித்து இப்பணியில் ஈடுபடுத்தி இத்திட்டத்தைச் செயற்படுத்த, ரூ. 5 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

108. 1989 ஆம் ஆண்டு, தருமபுரி மாவட்டத்தில், "தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்" என்னும் பெரும் திட்டத்தை கழக அரசு துவங்கியது. இத்திட்டம், தற்போது, ஆறு மாவட்டங்களில் சில பகுதிகளில் மட்டும் செயல்படுத்தப்பட்டு, சுமார் 55000 ஏழைப் பெண்களுக்குப் பயனளித்து வருகிறது. கிராமப்புறங்களில் வாழும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள எல்லாப் பெண்களுக்கும், அதிக வருமானம் கிடைக்கவும், வேலைவாய்ப்பினைப் பெருக்கவும், இத்திட்டத்தினை நிதி உதவி நிறுவனங்கள், வங்கிகள் ஆகியோரின் பங்கு பெற்று, மொத்தம் ரூ. 1420 கோடி செலவில், மாநிலம் முழுவதும் நீட்டிக்க, இந்த அரசு முடிவு செய்துள்ளது. நடப்பாண்டில் 10 மாவட்டங்களில் 3 இலட்சம் மகளிர் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின் செயல்பாட்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற மகளிர் குழந்தைகளுக்கான வளர்ச்சித் திட்டம், பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டம், மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம், இந்திரா மகளிர் திட்டம், சிறப்பு உள்ளடக்கத் திட்டம், பயன்படுத்தாத நில அபிவிருத்தி, நீர்ப்பிரிமுகடு வேளாண்மை போன்ற பல திட்டங்களும் ஒருங்கிணைக்கப்படும். இத்திட்டம் படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படுவதன் மூலம், வரும் ஐந்தாண்டுகளில் 10 இலட்சம் மகளிர் பயன் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)